**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.68/2024 - PW-2**

| | |
|---|---|
| Name | திரு. லட்சுமணன் |
| Husband/Father Name | மாதப்ப ரெட்டியார் |
| Village /Area | மகேந்திரவாடி |
| Taluk | நெமிலி |
| Occupation | விவசாயம் |
| Age | 60 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 01.09.2025.

**(எதிரிகள் 1 முதல் 4 வரை ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இறந்த சக்திவேல் என்னுடைய மகன் ஆவார். 24.04.2021 அன்று அருள் என்பவருடைய மகளை என் மகன் சக்திவேல் காதலித்துவந்தார். இந்த காதலை அருள் குடும்பத்தார் ஏற்க மறுத்ததால் எனது மகன் காதலித்த பெண் தற்கொலை செய்து இறந்துவிட்டார். அருள் என்பவரின் மகளின் இறப்பிற்கு காரணம் சக்திவேல் தான் என்று முன்விரோதத்தின் காரணமாக 16.12.2021 அன்று என்னுடைய மகன் சக்திவேல் JCB வாகனத்தை சிறுவளையம் நோக்கி ஓட்டி சென்ற போது அருளும் அவருடன் சேர்ந்து 5 நபர்கள் நந்தகுமார், விக்னேஷ், சதிஷ், பால சுப்பிரமணியன் மகன் கலையரசன் ஆகியோர்கள் சேர்ந்து என் மகனை தாக்கிய போது என் மருமகன் செந்தில் குமார் அவர்களை தடுத்த போது நீ தடுத்தால் உன்னையும் வெட்டி விடுவோம் என்று மிரட்டினார்கள். அருள் என்பவர் என் மகன் சக்திவேலை தலையிலும்,

இடது கண்ணத்திலும் கத்தியால் வெட்டயதில் எனது மகனினுடைய சுண்டு விரல் துண்டாகி கீழே கிடந்தது அதை நான் எடுத்து சென்று அடுக்கம்பாறை மருத்துவமனையில் ஒப்படைத்தேன். எனது மகனை நான் அடுக்கம்பாறை மருத்துவமனையில் சென்று பார்தேன் அங்கு என் மகன் சுயநினைவு இழந்து இறந்து விட்டதாகவும் என் மருமகன் என்னிடம் கூறினார். எனது மருமகன் செந்தில்குமார் தான் சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

என் மகன் சக்திவேலின் விரல் துண்டாகி அதனை நான் மருத்துவமனையில் ஒப்படைத்த விவரத்தை போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். சம்பவத்தற்கு பிறகு எனது மகனை நான் முதன் முறையாக அடுக்கம்பாறை மருத்துவமனையில் தான் பார்த்தேன். சம்பவம் குறித்து எனது மருமகன் தான் எனக்கு தகவல் தெரிவித்தார் என்று சொன்னால் சரிதான். எனது மகன் சக்திவேலுக்கு ஒரு கால் இல்லை என்றும் மற்றொரு காலில் பாதம் முழுவதுமாக இல்லை என்றும் அதனால் அவர் வாக்கர் உதவியுடன் தான் நடப்பார் என்று சொன்னால் சரிதான் அந்த வாக்கர் இல்லை என்றால் என் மகன் நடக்க முடியாது என்று சொன்னால் சரிதான். எனது மகன் ஒரு காலை இழுந்து பிறகு JCB வாகனத்தை ஓட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல ஓட்டினார். அருள் என்பவரின் மகள் இறப்பிற்கு என்னுடைய மகன் தான் காரணம் என்று அருள் குடும்பத்தார் எந்த புகாரையும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல கொடுத்துள்ளார். என்னுடைய மருமகன் செந்தில்குமாரின் நண்பர்கள் மூர்த்தி, மனோகர் என்னு சொன்னால் சரிதான். என் மகன் அருள்

வீட்டை இடித்தாரா என்றால் இல்லை. என்னுடைய இறந்த மகனான சக்திவேலின் மனைவி எனது மகனின் இறப்பிற்கு வரவில்லை என்று சொன்னால் சரிதான். எனது மகனுக்கும் மருமகனுக்கும் குடிபழக்கம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது மகனின் குடிப்பழக்கத்தால் தான் எனது மருமகள் அவருடன் தங்காமல் பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டார் என்றுசொன்னால் சரியல்ல எனது மகன் காலை இழுந்து விட்டதல் அவரது பெற்றோர் அவரை அழைத்து சென்றுவிட்டார். என் மகன் அவரது நண்பர்களுடன் சேர்ந்து குடித்து விட்டு சிறுவளையத்தில் உள்ள கேசவனின் வீட்டு போர்ட்டிகோவை இடித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மகனும் அவருடன் இருந்த நபர்களும் கேசவனின் வீட்டு போர்ட்டிகோவை இடித்ததால் தான் அங்கிருந்த கிராமத்து மக்கள் அனைவரும் சேர்ந்து எனது மகனை அடித்ததால் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் எனது மகன் JCB வண்டியை எடுத்து சென்றதை நான் பார்தேனா என்றால் இல்லை என் மருமகன் பார்த்தார்.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.01 18:09:49 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.